# மூளை ரத்தநாள அடைப்புக்கு புதிய முறை சிகிச்சை

பீளமேடு, அக். 28 -

"மூளைக்கு செல்லும் ரத்தக்குழாய் அடைப்பை சரி செய்ய, புதிய சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது," என, கே.எம்.சி.எச்., சேர்மன் டாக்டர் நல்லா பழனிச்சாமி தெரிவித்தார்.

இதுகுறித்து, நல்லாபழனிச்சாமி, டாக்டர் விஜயன் கூறியதாவது:

இருதயத்துக்கு செல்லும் ரத்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டால், மாரடைப்பு ஏற்பட்டு, உயிரிழக்க நேரிடும். இதேபோன்று, மூளைக்கு செல்லும் ரத்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டால், உறுப்புகளின் செயல்பாடு நின்று, பக்கவாதம் ஏற்படும். ரத்தக்குழாயில் ஏற்படும் அடைப்பை உடனடியாக கண்டறிந்து சிகிச்சை அளித்தால், பக்கவாதத்தையும் தடுக்க முடியும். திடீரென உடலின் ஒரு பகுதி கை, கால், உதடுகளில் மரமரப்பான உணர்வு ஏற்படுவது, பக்கவாதத்துக்கு அறிகுறி. இயக்கம் குறைந்து செயலற்ற தன்மையை அடைந்துவிடும். இந்நோயால் பாதிக்கப்படுவோர் ஆறு மணி நேரத்துக்குள், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டால், ரத்தக்குழாய் அடைப்பை சரி செய்ய முடியும்.

எங்கள் மருத்துவமனையில் இந்நோய்க்கு, 'சோனாத்ரோம்போலிசிஸ்' என்ற புதிய சிகிச்சை முறையை அறிமுகம் செய்துள்ளோம். மூளை ரத்தநாளங்களில் ஏற்படும் அடைப்பை, மருந்து செலுத்தியும், அதோடு 'அல்ட்ரா சவுண்ட்' அலைகளை பயன்படுத்தியும் நீக்க முடியும்; மூளையில் ஏற்படும் ரத்த குழாய் அடைப்பை, 'டாப்ளர்' ஸ்கேன் மூலம் கண்டறிந்து, ரத்தக் குழாய் அடைப்பை நீக்க முடியும். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட, அன்னூர் பகுதியை சேர்ந்த பொன்னுசாமி என்பவருக்கு, இந்த புதிய முறை சிகிச்சை அளிக்கப்பட்டு, 14 நாட்களில் குணமடைந்துள்ளார்.

இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.